REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

# நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆடி 10உ வியாழன் (25—7—57) ★ ★ வெளியூர்: ஆடி 11உ வெள்ளி (26—7—57) [இதழ் 34

## தலைமறைவாகமாட்டார்களாம்!

எதிர்காலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி தலைமறைவாகப் போகவேண்டிய அவசியம் நேரிடாது என்றும், இன்றைய இந்திய அரசியல் நிலைகளின்படி, கம்யூனிஸ்டுக் கட்சி ஒரு சட்டபூர்வமான கட்சியாகவே இயங்கமுடியும் என்றும், கட்சியின் மத்தியக் கமிட்டி செயலாளர் அஜாய்கோஷ், பத்திரிகையாளரிடம் பேசுகையில் கூறியிருக்கிறாராம்!

# குற்றவாளிக் கூண்டில் டெல்லி!

## நாள் தவருத விசாரணை!

### சட்டசபையில் தி. மு. கழகம் எழுப்பும் குற்றச்சாட்டுகள்

### 'எதிரி'க்கு காங்கிரசார் 'வக்கீல்'களாகின்றனர்

### தி. மு. க. பற்றி மேலும் ஒரு வடநாட்டு இதழின் கண்ணோட்டம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டசபைப் பணி குறித்து, மேலும் ஒரு வட நாட்டு ஆங்கில இதழ் கண்ணோட்டம் செலுத்தியிருக்கிறது.

சென்னை சட்டசபையில் தினந்தோறும் வடநாடு, குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுகிறது.

'வட நாடு தென்னாட்டின்மீது ஆதிக்கம் செலுத்துகிறது; தென்னவரைக் கிஞ்சிற்றும் மதிப்பதில்லை. டெல்லி சர்க்கார், வட நாட்டையே வாழ்விக்கிறது; தென்னாட்டிற்கு ஓரவஞ்சனை புரிகிறது' என்பவைதான், வட நாட்டின் மீதும் டெல்லி சர்க்கார் மீதும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள்! குற்றஞ்சாட்டுபவர்கள், திரு. அண்ணாதுரை தலைமையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15 உறுப்பினர்கள்.

'எதிரி'க்காக (வட நாட்டிற்காக) பரிந்து பேசி வாதாடுகிற வக்கீல்களாக உள்ளனர், காங்கிரஸ் உறுப்பினர்கள்!

'இவை, பம்பாயிலும் டெல்லியிலுமிருந்து வெளிவரும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற பிரபல ஆங்கில தினசரியின் 24—7—57-ந் தேதிய வெளியீட்டில் 'சென்னைக் கடிதம்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள கட்டுரையின் சாரம்.

"ஒவ்வொரு முறையும் எந்தப் பிரச்சினை வந்தாலும், தி. மு. கழகத்தினர், 'வடநாடு—தென்னாடு' என்ற கருத்தை வலியுறுத்திவருகின்றனர். தி. மு. கழகத்தினரின் விவாதங்கள் எல்லாம், 'தமிழ் நாடு தனி நாடாக வேண்டும்' என்ற முழக்கத்துடன்தான் முடிக்கப்படுகின்றன. இது கண்டு, ஆளும் கட்சியினர், சீறுகின்றனர்—சினந்துகொள்கின்றனர்!

"ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், திரு. அண்ணாதுரையும் அவரது சகாக்களும், வடநாட்டிற்கும், டில்லி சர்க்காருக்கும் எதிரான தாக்குதல் நடத்தத் தவறுவதே இல்லை"

என்றும் அந்த இதழ் குறிப்பிட்டிருக்கிறது.

## தபால் ஊழியர் வேலை நிறுத்தம்

### சங்கத் தலைவருக்கு நேரு அழைப்பு

தபால் தந்தி ஊழியர், சங்க தேசிய பெடரேஷன் தலைவரான வி. ஜி. தால்வி அவர்களை, புதுடில்லி வந்து தன்னைச் சந்திக்குமாறு பண்டித நேரு அழைப்பு அனுப்பியிருக்கிறாராம்.

அழைப்பு சுருக்கமானது என்றும், அதில் அழைப்பு எதற்காக என்று குறிக்கப்படாவிட்டாலும், உத்தேச வேலை நிறுத்தைத் தவிர்ப்பதற்கான பேச்சு வார்த்தை நடத்தவே அழைப்பு இருக்குமென்றும் யூகிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## ஆக. 29: மாநிலமெங்கும் பொது வேலைநிறுத்தம்

### அசாமைத் திருப்திபடுத்த டில்லி முயற்சி

### மதில்மேல் பூனையாகிறார் பண்டிதர்

புதுடில்லி, ஜூலை 24—

அசாமில் எண்ணெய்த் தொழிற்சாலையை நிறுவ வேண்டும் என்பதற்காக, வரும் 29-ந் தேதியன்று அசாம் மாநிலம் எங்கும் மீண்டும் ஒரு பொது வேலைநிறுத்தம் 'அர்த்தால்' நடைபெறும் என்று தெரியவருகிறது.

இதற்கிடையில், டில்லி வந்துள்ள அசாம் பிரதேச காங்கிரஸ் தூதுக் குழுவினர் பண்டிதரையும், இதர டில்லி மந்திரிகள், அதிகாரிகளையும் ஏற்கனவே இரு முறை சந்தித்துவிட்டனர். இறுதியாக, நாளை பண்டிதரை மீண்டும் சந்திப்பர்.

இந்தச் சந்திப்புகளின்போது அசாம் கோரிக்கை விரிவாக பரிசீலிக்கப்பட்டதாம்!

பண்டிதர், அசாமின் கோரிக்கையை நிராகரிக்கவும் முடியாமல், முன்பு செய்த முடிவை மாற்றவும் முடியாமல் தத்தளிக்கிறாராம்!

பீகாரையும், அசாமையும் ஒரு சேரத் திருப்திப்படுத்த வழி தேடி அலைகிறாராம், பண்டிதர்!

இந்தப் பேச்சுவார்த்தைகள் பற்றியும், சர்க்காரின் கொள்கை பற்றியும் நாளையோ, மறு தினமோ அவர், அறிக்கை ஒன்று வெளியிடப்போவதாகவும் தெரிய வருகிறது.

தூதுக் குழுவைச் சேர்ந்த எவரும், சந்திப்புகளின் விளைவு குறித்து ஏதும் கூற மறுத்துவிட்டிருக்கின்றனர்.

## ஒரிசாவில் அரிசி கொள்முதல்

### உபரி முழுவதையும் வாங்க டெல்லி முடிவு

"ஒரிசாவில் உபரியாகக் கிடைக்கும் அரிசி முழுவதையும் வாங்குவதென டெல்லி சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள்" என, உணவு மந்திரி ஏ. பி. ஜெயின் மக்கள்சபையில் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே உபரி அரிசி கொள்முதலாகி வருவதாகவும், இது போல வேறு எந்த மாநிலத்திலும் அரிசி கொள்முதல் வேலையை டெல்லி சர்க்கார் துவங்கவில்லை என்றும் அந்த மந்திரி கூறியிருக்கிறார்.

## தமிழர் அவதி துடைக்க முன்வரமாட்டாராம்!

### பஞ்சாப் அகதிகள்போல வாழ்வுதர அவசியமில்லையாம்!

### இலங்கையிலிருந்து துரத்தப்படும் தமிழர்பற்றி பண்டிதர்

புதுடில்லி, ஜூலை 23—

பஞ்சாபிலிருந்து ஓடிவந்த அகதிகளை வரவேற்று உபசரித்து புதுவாழ்வு தந்ததுபோல, இலங்கையிலிருந்து துரத்தப்பட்டுத் தாயகம் திரும்பிவருபவர்களுக்கு வாழ்வுதர டில்லி சர்க்கார் ஏதும் செய்யமாட்டார்களாம்!

இந்தத் தகவலை பண்டித நேருவே மக்கள்சபையில் கூறியிருக்கிறார்.

'பண்டிதரும் பண்டாவும் சந்தித்துப் பேசியிருப்பதின் விளைவாக, இலங்கை இந்தியர் பிரச்சினை எப்போது தீர்க்கப்படும் என்று கேட்கப்பட்டபோது பண்டித நேரு, 'எப்போது முடியும் என்று திட்டமாகக் கூறுவதற்கு இல்லை' என்று கூறியிருக்கிறார்.

மேலும், 'இலங்கையிலிருந்து திரும்பி வருபவர்கள் தங்கள் சம்பாத்தியங்களுடன் வருவதால், அவர்களுக்கு புது வாழ்வளிக்க எந்த நடவடிக்கையும் தேவை இல்லை' என்று வேறு கூறினாராம், இந்தப் பண்டிதர்!

உப கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், 'சம்பந்தப்பட்ட மாநில சர்க்கார்களே அந்த இலங்கை அகதிகளில் உண்மையில் கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவுவார்கள்; எனவே, டெல்லி சர்க்கார், பஞ்சாப் அகதிகளுக்குச் செய்தது போல இவர்களுக்கும் வாழ்வு தர வேண்டும் என்ற அவசியம் இல்லை' என்றும் கூறினாராம்!

## திருமணங்களுக்கு வரிவிதிப்பு!

### 'மூன்று பலன்கள் தரும்'

### என்கிறார் யோசனைகூறும் பொருளாதார நிபுணர்

'திருமணங்களுக்கு ஒரு சிறு தொகையை வரியாக விதிக்கலாம்' என்று, பிரபல பொருளாதார நிபுணரான டாக்டர் எஸ். சந்திரசேகர், பாராளுமன்றத்தில், ஒரு யோசனை கூறியுள்ளார்.

இந்த வரி விதிப்பினால், மூன்று வகையான பலன் கிடைக்கும் என்று அவர் வர்ணித்தார்.

வருமானம் கிடைக்கும் என்பது ஒன்று; ஆண்டுதோறும் எத்தனை திருமணங்கள் நடைபெறுகின்றன என்பதைக் கணக்கிட முடியும் என்பது இரண்டாவது; இந்த வரி விதிப்புமூலம் திருமணங்களே நடைபெறாமற் போகாது என்றாலும், மணம்புரிய விரும்பும் மணமக்களை, விழாவினை ஒத்திப்போடுமாறு தூண்டும்; அதன்மூலம், ஏற்கனவே கடுமையாக உள்ள மக்கள் தொகை அதிகரிப்புப் பிரச்சினையை மேலும் கடுமையானதாக ஆக்காமல் இருக்கத் துணை புரியும் என்பது மூன்றாவது; இப்படி மூன்று வகையான நன்மைகள், இந்தத் திருமண வரிவிதிப்பு மூலம் கிடைக்கும் என்று அவர் கூறியிருக்கிறார்.

## டெல்லி சர்க்கார் நடத்தும் அசோகா ஓட்டல்

### 'தினசரி நஷ்டக் கணக்கு எங்கே?'

### மக்கள் சபை கேள்வி கண்டு பண்டிதர் ஆத்திரம்

புதுடில்லி, ஜூலை 23—

டெல்லியில் சர்க்கார் நடத்திவரும் மிகப் பெரிய ஆடம்பரமான உணவு விடுதியான அசோகா ஓட்டல், இப்போது பெரும் நஷ்டத்தில் நடந்துவருவதை பண்டித நேருவே மக்கள் சபையில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

டில்லிப் பேரரசின் தற்காப்பு இலாகாவில் முன்பு மந்திரியாக இருந்த மகாவீர் தியாகி, 'இந்த ஓட்டலை நடத்துவதால் தினசரி ஏற்படும் நஷ்டம் எவ்வளவு?' என்று கேட்டார்.

உதவி மந்திரி சந்தா, கணக்குகள் தினசரி பார்க்கப்படுவதில்லை என்றும், ஆண்டுதோறும்தான் பார்க்கப்படுகின்றன என்றும் கூறியிருக்கிறார்.

உடனே தியாகி எழுந்து, 'இந்த விவரங்களைத் தெரிந்து கொள்ள சபைக்கு எல்லா உரிமைகளும் உண்டு' என்று கூறியிருக்கிறார்.

உடனே நேரு எழுந்து; 'கனம் உறுப்பினர், இன்று வழக்கத்திற்கு மாறாக, விவரமறியாமல் பேசுகிறார்' என்று கூறினாராம்!

"ஏனெனில், தினம் ஏற்படும் நஷ்டம் மிகப்பெரியது" என்று, சுடச்சுடப் பதில் தந்திருக்கிறார் தியாகி!

ஆத்திரப்பட்ட பண்டிதர் கூறியதாவது:—

"இப்போது ஓட்டல் நஷ்டத்தில்தான் நடைபெறுகிறது; ஆனால் அது துவங்கி எட்டு மாதம்தான் ஆகிறது என்பதை மறந்து விடக்கூடாது; இன்னும் கட்டிடம்கூட முழுவதுமாக கட்டி முடியவில்லை. 'யுனெஸ்கோ' மாநாட்டிற்கு வந்த 12,000 பிரதிநிதிகளுக்காக அவசர அவசரமாக அது கட்டப்பட்டது. இதுபோல டில்லியில் ஒரு பெரிய ஓட்டல் இருப்பது, அன்னிய நாட்டவர் வசதிக்காக மிக அத்தியாவசியமானதாகும்."

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 25—7—57 வியாழன்

# அமைச்சரின் அபாயச் சங்கு!

இந்தி மொழி கற்றுக்கொள்ளாது தமிழ்நாட்டார் இருந்துவிடுவார்களானல், எதிர்காலத்தில் மத்திய அரசாங்கத்தில் அவர்களுக்கு வேலை கிடைக்காது போகும். எனவே, இப்பொழுதே தமிழ்நாட்டு மக்கள் இந்தி மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம், சட்டமன்றத்தில் குறிப்பிட்டார்.

மத்திய அரசாங்க உத்தியோகங்களைக் காட்டி, தமிழ் மக்களை இந்தி கற்றுக்கொள்ள வேண்டும் எனக் கூறும் நிதி அமைச்சர், அவ்வாறு கூறுவதுடனும் இருந்துவிடவில்லை. தமிழ் மக்கள் இந்தி கற்கவேண்டியதற்கான மற்றொரு நியாயத்தையும், அதே நேரத்தில் கூறியும் உள்ளார்.

அதாவது, 'இந்தியாவின் தேசிய மொழி இந்தி. எனவே, இந்தியர் ஒவ்வொருவரும் அம்மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும்' என்று நிதி அமைச்சர் அப்பொழுது வற்புறுத்தியுள்ளார். இவ்வாறு வற்புறுத்தியதின் மூலம், மத்திய அரசாங்க உத்தியோகம் தமிழ் மக்களுக்குத் தேவையாக இருந்தாலும் இல்லாமற்போனலும், இந்தி மொழியைக் கட்டாயமாகக் கற்றுக்கொள்வதைத் தவிர்த்து வேறு வழியே கிடையாது என அவர் கருதி இருப்பதாகவே எவரும் கொள்ளுவர்.

மத்திய அரசாங்க உத்தியோகங்களைத் தமிழ்நாட்டவர் பெறுவதற்கு இந்தி மொழி கற்பதை ஒரு நிபந்தனையாக நிதி அமைச்சர் காட்டுவதிலிருந்து, தமிழ் நாட்டில் படித்துப் பட்டம் பெறுகின்றவர்கள் எதிர்காலத்தில் மத்திய அரசாங்க உத்தியோகங்களை மட்டுமேதான் நம்பி வாழ வேண்டியவர்களாவர் எனக் கருதுவதற்கு இடமாகிறது. அதுவுமன்றி, இனி படித்துப் பட்டம் பெறும் தமிழர்களுக்கு வாழ்வளிக்கும் தொழில் ஏற்பாடுகள் எதுவும், இனியும் தமிழ்நாட்டில் இடம் பெறப் போவது கிடையாது எனக் கருதுவதற்கும், நிதி அமைச்சர் போதனை இடமளிக்கின்றது.

ஆங்கில ஏகாதிபத்திய காலத்தில், படித்துப் பட்டம் பெற்ற தமிழ் மக்கள் பலர், தமிழகத்தைவிட்டு வெளியேறி மத்திய அரசாங்கத்திலும், மற்ற மாநில அரசாங்கங்களிலும் உத்தியோகங்களில் அமர்ந்தனர் என்பது உண்மை. அதே போன்று, இந்தியத் துணைக் கண்டத்தின் மற்ற பகுதிகளில் இருந்துவரும் தொழில் நிலையங்களில் ஊழியம் செய்துவந்தனர் என்பதும் உண்மை.

படித்துப் பட்டம் பெற்றவர்கள் மட்டுமே, அக்காலத்தில் பிழைப்பு தேடி தமிழகத்தை விட்டு வெளியேறினர்கள் என்பதில்லை. அவ்வெளியேற்றத்திற்கு, உடல்பலத்தை மட்டுமே நம்பி வாழ்ந்துவந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களும், வேறு வாழவகையற்ற நிலையில்-ஆளாகத்தான் செய்தனர்.

படித்துப் பட்டம் பெற்றவர்களும, படியாது வேலையற்றுக் கிடந்தவர்களும், தங்களுடைய உழைப்பைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள தமிழகம் திறனற்றுக் கிடந்த காரணத்தால், இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் பிழைப்பு நாடி குடிபுகுந்தனர் என்பதுடன், தமிழ் மக்கள் குடியேற்ற சோகக் கதை முற்றுப் பெற்றுவிடவில்லை. தாயகத்தில் வாழ வகையற்றுப் போனதால், இலங்கை, மலாயா, தென் ஆப்பிரிக்கா போன்ற வெளிநாடுகளுக்குக் கடல் கடந்து சென்று, பிழைப்பை ஓட்டிவந்தனர் தமிழ் மக்கள்.

ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்திலேயே தமிழகத்தில் தொழில் வளம் தேவையான அளவு பெருகி இருக்குமானல், மேற்குறிப்பிட்டவாறு படித்துப் பட்டம் பெற்றிருந்தாலும் படிக்காதுஇருந்தாலும் தமிழ்மக்கள், கடல் கடந்து செல்லவேண்டியதிருக்காது. எங்கு வேலை கிடைக்கும்—எவர் எங்கள் உழைப்பை ஏற்றுக்கொள்ளுவர்—எங்கு எங்கள் வயிற்றுப் பிழைப்பு நடக்கும்—என்று, இந்தியத் துணைக்கண்டம் முழுதும், பெருங் கவலையுடன் சுற்றித் திரியவேண்டிய கட்டாயம் அன்றைய தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்க நியாயமே இருந்திருக்காது.

ஆங்கில ஆட்சியுடன் மேற்குறித்துள்ள அவலநிலையும் தமிழ் மக்களை விட்டுத் தொலைந்திருக்கவேண்டும். அவ்வாறு தொலைந்திருக்கும் என்றுதான் எவரும் நம்புவர். அதைத்தான் எவரும் எதிர்பார்ப்பர்.

ஆனல் அனைவரும் எதிர்பார்த்தபடி, இப்பத்தாண்டுக் காலமாக தமிழகத்தில் தொழில் வளம் ஏற்படவில்லை. தொழில் வளத்தை நோக்கி, ஆமை வேகத்திலும்கூட தமிழகம் நகர்ந்து செல்லவில்லை.

இதே கதியில்தான் தமிழகம் எதிர்காலத்தில் இருக்கும் என்பது நிதி அமைச்சரின் கூற்றிலிருந்துத் தெளிவாகிறது. இப்பத்தாண்டுக் காலமாக தமிழகம் தொழில் துறையில் கடுகளவு முன்னேற்றமும் பெறாது இருக்கின்ற நடைமுறை உண்மையும், நிதி அமைச்சர் கூற்றை மெய்ப்பிக்கின்றது.

எனவே, தமிழக மக்கள் இந்தி கற்றுக்கொள்வதின் மூலம் மத்திய அரசாங்க உத்தியோகங்களையாவது பெற்று காலங் கழிக்கட்டும் என்ற எண்ணத்தில்தான், இந்தியைக் கற்றுக் கொள்ளும்படி தமிழக மக்களுக்குப் போதிக்கின்றார் நிதியமைச்சர் என்றே நாம் நினைக்கின்றோம். இதைப் பின்னணியாகக் கொண்டு பார்க்குமிடத்து, நிதி அமைச்சரின் இந்தி பிரச்சாரத்தை அபாயச் சங்காகத்தான் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

## தெரிந்துகொள்ளுங்கள்

ஆரம்பக் கல்விக்காக 1956—57-ம் ஆண்டில் பல்வேறு மாநில சர்க்கார்களுக்கு ரூ. 3,29,92,940 வழங்கப்பட்டதில்ரூ.2,19,13,177 அவர்களால் பயன்படுத்திக் கொள்ளப்பட்டதென்றும், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் சம்பள உயர்வுக்காக பல்வேறு மாநில சர்க்கார்களுக்கு 1956—57-ல் ரூ. 77,15,500 ஒதுக்கப்பட்டதென்றும் மக்கள் சபையில் தகவல் தாய்பட்டிருக்கிறது.

# நாகர்கள் கோரிக்கைக்குப் பண்டிதர் இணக்கம் தெரிவிக்கிறர்!

## ஆவேசம் தணிகிறது—குரலில் கடுமை குறைகிறது

### டெல்லி உருவாக்கிவரும் புதிய ஏகாதிபத்தியத்திற்கு பாராளுமன்றத்தில் கண்டனம்

புதுடில்லி, ஜூலை 24—

நாகர்களின் கோரிக்கைக்கு பண்டிதர் கொஞ்சம் இறங்கிவருவதாகத் தெரிகிறது.

நாகர்களின் கோரிக்கைகளை எல்லாம் ஆவேசமாகத் தாக்கிவந்த பண்டிதரின் குரல் இப்போது சற்று தணிந்துள்ளது என்பதை, அவரது பாராளுமன்றப் பேச்சு ஒன்று கூறுவதாயுள்ளது.

"நாகர்களின் அரசியல் கோரிக்கையைப் பொறுத்த வரையில் சர்க்காரின் கருத்து என்னவென்றால், நாகர்களுக்கு, எவ்வளவு முடியுமோ அவ்வளவு சுதந்திரம் தரவேண்டும்; அதற்கொப்ப அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்பது தான்"

என்று பண்டித நேரு பாராளுமன்றத்தில் கூறியிருக்கிறர்.

நேருவின் இந்த அறிவிப்பு, இதுவரை தரப்படாத ஒன்று என்றும், இதன் மூலம் பண்டிதர், நாகர்கள் தங்களின் பலாத்கார நடவடிக்கைகளைக் கைவிட்டு விட்டு தங்களது அரசியல் கோரிக்கைகள் பற்றி சர்க்கார் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் என்றே கருதப்படுகிறது.

மேலும் பண்டிதர், நாகர் கிளர்ச்சி பற்றி அசாம் மந்திரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், அவர்கள்,முடிந்த தேர்தல் முடிவுகள் தந்துள்ள பாடம் எல்லாம், 'நாகர் கோரிக்கை பற்றி ஏதாவது செய்தாகவேண்டும் என்பது தான்' என வலியுறுத்தியதாகவும் கூறப்படுகிறது.

அன்னிய விவகார இலாகா மானியக் கோரிக்கை பற்றி நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையிலேயே நேரு, மேற்கண்டவாறு கூறியிருக்கிறர்.

விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் பலரும், நாகர் விஷயத்தில் சர்க்கார் கையாளும் இராணுவ நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர்.

சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த பி. வி. ஜி. ராஜு பேசுகையில், 'நாகர்களை சர்க்கார் திட்டமிட்டுக் கொலை புரிந்துவருகிறது' என்று குறிப்பிட்டபோது, பண்டிதர் குறுக்கிட்டு, 'கொலையா? ஆச்சரியமாயிருக்கிறது; உறுப்பினர், ஏதாவது அப்படிச் சம்பவத்தைச் சுட்டிக் காட்ட முடியுமா?' என்று கேட்டாராம்!

தோழர் ராஜு தொடர்ந்து பேசுகையில், 'அது பற்றி ஒன்றும் சந்தேகமே இல்லை' என்று கூறிவிட்டு, 'நாகர் தலைவரான பிஜோவைப் பிடித்துத் தருவோருக்கு ரூ. 10,000 பரிசளிப்பதாக சர்க்கார் அறிவித்திருக்கிறதே' என்று கேட்டிருக்கிறர்.

தொடர்ந்து பேசிய அவர் குறிப்பிட்டதாவது:—

"நாகர்கள் ஒரு தனி சுதந்திர நாடு வேண்டுமெனக் கேட்கின்றனர்; நாம் இந்தக் கோரிக்கைக்கு இணங்க முடியாமலிருக்கலாம்; ஆனல், இந்த மலைவாசிகளுடன் நட்புறவு கொள்வதற்கு, அவர்களை எப்படி நடத்தவேண்டும் என்பது நமக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

"அவர்கள் தங்கள் இனம் பற்றி பெருமைப்படுகிறர்கள். அதனல், தங்களுடைய தலைவர்களுக்கு சமமான அந்தஸ்து கிடைத்தாலன்றி, சர்க்காருடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட அவர்கள் தயாராக இல்லை; மறுக்கிறர்கள்.

"மேலும், டெல்லி சர்க்கார், பல பிரதேசங்களில் சந்தேகத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது.

"பூட்டான் மற்றும் சிக்கிம் போன்ற பாதுகாப்பு அந்தஸ்து தரப்பட்டுள்ள இடங்களில் டெல்லி சர்க்கார், ஒரு புதுவகையான ஏகாதிபத்தியத்தை உருவாக்கி வருகிறர்கள்."

# தொழில் தகராறுகள் விரைவில் தீர்வு காணுவீர்

## மாநிலங்களுக்கு டெல்லி தாக்கீது

தொழில் தகராறுகளைச் சீக்கிரமாக நிர்வாக நடவடிக்கைகள் மூலம் தீர்த்துவைக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி டெல்லி சர்க்கார் தொழிலாளர் மந்திரி, மாநில அரசுகளுக்குக் கடிதம் வரைந்திருக்கிறர் என்று தெரிகிறது.

தகராறுகளில் உடன்பாடு காணுவதற்காக, அதிகாரிகளின் எண்ணிக்கையைக் கூடுதலாக்கிக் கொள்வதுடன், ஒவ்வொரு தகராறையும் இத்தனை நாட்களுக்குள் தீர்க்க வேண்டும் என்று காலவரையறை வைத்துக் கொண்டு காரியமாற்றவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தியிருக்கிறராம்.

'தகராறுகளுக்குத் தீர்வு காணுவதில் காலதாமதமாவது மேலும் தகராறுகளை வளர்க்கவும், அச்சத்தையும் சந்தேகத்தையும் ஊட்டவும்தான் பயன்படுகிறது; தாமதத்திற்குக் காரணம், அதிகாரிகளின் எண்ணிக்கை போதவில்லை என்பதும், இருக்கிற அதிகாரிகளுக்கும் வேலைப்பளு அதிகமாயிருக்கிறது என்பதும் தான்,' என்றும் டெல்லி அமைச்சர் சுட்டிக் காட்டியிருக்கிறர்.

# கருத்து அறிவிக்கலாம்; கட்டளையிடுவானேன்?

## மாநில விவகாரத்தில் டெல்லி தலையிடும் அதிக்கிரமப் போக்கு

### சென்னை மேல் (சட்ட) சபையில் மீண்டும் கண்டனக் குரல்

சென்னை, ஜூலை 24—

டெல்லி சர்க்கார் மாநில சர்க்காரின் சிறு சிறு நடவடிக்கைகளில்கூடத் தலையிட்டு குட்டை குழப்புகிறர்கள் என்ற உண்மை, மீண்டுமோர் முறை சென்னை மேல் (சட்ட) சபையில் எடுத்துரைக்கப்பட்டு, கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மின்சார நிறுவனங்கள் ஆர்ஜித திருத்தச் சட்டம், மேல்சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

மசோதா விவாதிக்கப்பட்டபோது, திருத்த மசோதாவின் அவசியம் குறித்து மந்திரி இராமையா விளக்கம் தந்தார்.

அதாவது, 1954-ம் ஆண்டு சென்னையின் மின்சார நிறுவனங்கள் ஆர்ஜிதச் சட்டம் நிறைவேற்றப்பட்டதாயும், ஆனல், அந்தச் சட்டத்தின் முன்னுரை, சட்டத்தின் மூலம் எல்லா மின்சார நிறுவனங்களையும் தேசீயமயமாக்குகிற அதிகாரத்தை மாநில சர்க்கார் பெற்றிருப்பதுபோல அமைந்திருப்பதாகவும் மத்திய சர்க்கார் சுட்டிக்காட்டியதாம்.

இது குறித்துப் பேசும்போது, கே. பாலசுப்பிரமணிய அய்யர், முன்னுரையும் வாசகங்களும் தெளிவாகவே இருப்பதாகக் குறிப்பிட்டார்.

உடனே நிதி மந்திரி சுப்பிரமணியம் குறுக்கிட்டுக் கூறியதாவது:—

"இந்தத் திருத்த மசோதா தேவையே இல்லை; ஆனல் துரதிருஷ்டவசமாக, டெல்லி சர்க்காரின் சில சட்ட அதிகாரிகள், சட்டத்தின் முன்னுரை சரியாகத்தான்—முறையாகத்தான் இருக்கிறது என்று கருதியபோதிலும், 'சட்ட விதிகளுக்கு இணக்கமானதாக இல்லை' என்று கூறினர்கள்; பின்னர், ஆந்திர சர்க்காரும் நம்மைப்போலவே ஒரு சட்டம் நிறைவேற்றினர்கள்; நாம் இதனை டெல்லி அதிகாரிகளுக்குச் சுட்டிக் காட்டியபின்பும் அவர்கள், 'முன்னுரை, சட்ட விதிகளுக்கு இணக்கமானதாக இல்லை' என்றே கூறிவிட்டனர். எனவேதான், இந்தத் திருத்த மசோதாவாகும்" என்றார்.

உடனே டாக்டர் வி. கே. ஜான் கூறியதாவது:—

"மாநில சர்க்காரின் விவகாரத்தில் இப்படி டெல்லி சர்க்கார் குறுக்கிடுவது முறையல்ல; இதுபோன்ற விவகாரங்களில் கூட டெல்லி சர்க்கார் தலையிடும் போக்கினை, நாம் வன்மையாகக் கண்டித்தாக வேண்டும்."

உடனே மந்திரி வெங்கட்ராமன் எழுந்து, 'இந்த விவகாரத்தில் டெல்லி சர்க்காருக்கு கருத்தறிவிக்க நியாயமான உரிமை உண்டு' என்று கூறினராம்;

டாக்டர் ஜான் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"டெல்லி சர்க்கார், தங்களின் கருத்தை அறிவிக்கலாம்; ஆனல் கட்டளையிடக் கூடாது. அதுவும், அவர்கள் தவறு இழைத்திருக்கும் போது!" என்று சுட்டிக்காட்டியிருக்கிறர்.

# கவிஞர்கள் உள்ளம் சுருங்கியதேன்?

## முன்னைய-இன்றைய கவிஞர்கள் உள்ளத்தை ஆய்கிறார் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

மதுரை, ஜூலை 24—

"கவிஞனின் உள்ளத்திற்கு அரண் அமைக்கமுடியாது. மக்களது சிந்தனையைச் சிதறடிக்காமல் முன்னேற்றப் பாதைக்கு இழுத்துச் செல்கிற கவிஞர்கள்தான் சிறந்த கவிஞர்கள் என்பது உலகப் பேரறிஞர்கள் கருத்தாகும்.

"முன்பு இந்த நல்ல பணி நடைபெற்றது என்றாலும், 18-ம் நூற்றாண்டிற்குப் பின் நிலைமாறியது. முன்பு தங்களுடைய நிலையை உயர்த்தி வைத்திருந்த கவிஞர்கட்கு மாறாக, 'நாயினும் கடையேன்; மரத்தினும் கடையேனும்; புழுவினும் கடையேன்' என்று, அவர்கட்குப் பின் வந்த கவிஞர்கள் தம்மைத் தாமே தாழ்த்திக் கொண்டனர். விரிந்து பரந்திருக்க வேண்டிய கவிஞன் உள்ளம் சுருங்கி விட்டது"

என்று, 'கவிஞன் உள்ளம்' என்ற பொருள்பற்றிப் பேசுகையில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

14—7—57 காலை 10 மணியளவில், மதுரை நகர் தி. மு. கழகச் சார்பில் பழனித்திரை அரங்கில் சேலம்-மதுரை வழக்குகள் நிதிக்காக வழக்கறிஞர் திரு. போத குமாரசாமி தலைமையில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

தலைவரை முன்மொழிந்தும் வழிமொழிந்தும் தோழர்கள் எஸ். முத்து, என். எஸ். இராசா ஆகியோர் பேசினர்.

தலைவர் தனது முன்னுரையில் சிறப்புச் சொற்பொழிவின் நோக்கங்களையும், சென்னைக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க வேண்டியதன் அவசியங்களையும் விளக்கிப் பேசினார்.

அடுத்து தோழர் கி. மனோகரன் எம். ஏ. அவர்கள் 'ஜனநாயகம்' என்ற பொருள் பற்றிப் பேசினார்.

பொதுச் செயலாளர் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"பழைமைக்குப் பணியாமல், வளையாமல், நெளியாமல், பழைமையையும் பார்த்துத் தேவையான கருத்துக்களை எடுத்துப் புதிய உலகைச் சமைக்கும் கவிஞன்தான் சிறந்த கவிஞன்; அந்த எழுச்சியை இன்று காண்கிறோம்.

"அவனவன் திறமையில் அவனவன் வாழ்வதென்றால் அறிவாளிதான் வாழமுடியும்; முட்டாள்களுக்கு வாழ்வு—உலகப் பயன் கிடைக்காது.

"விஞ்ஞானி தனக்காக மட்டும் வாழ்ந்தால் உலகத்தார் அவனால் ஆகும் பயனைப் பெற முடியாது. இதனால்தான், 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை!' என வள்ளுவர் பாடினார். இதிலே, பரந்து விரிந்த கவிஞன் உள்ளத்தைக் காண்கிறோம்.

"உண்மை, உயர்வு, நாட்டுக்குத் தேவையான கருத்துகள் தரும் கவிஞர்கள் தேவை. இதய நாடியைத் தடவும் கவிஞர்கள் தேவை! அத்தகு கவிஞர்களை வாழ்த்துவோம்!"

மேலும் அவர், பிரிட்டன், பிரான்சு ஆகிய நாடுகளின் தேசியப் பாடல்களை விளக்கிவிட்டு, இறுதியாக அவர் கேட்டுக்கொண்டார் :—

"நாட்டை நல்லதொரு நிலைக்குக் கொண்டுவருகின்ற பாடல்கள்தான் தேவை! அதை உருவாக்கும் கவிஞர்கள் தேவை! இதனைப் புரிய இளைஞர்களும் கலைஞர்களும் முன்வரவேண்டும்.

கொட்டகை முழுவதும் மக்கள் திரள் நிரம்பி வழிந்தது. வசூலான தொகையில் செலவுகள் போக சேலம் தொகுதி தேர்தல் வழக்கு நிதிக்குப் பொதுச் செயலாளரிடம் ரூ. 300 தரப்பட்டது. மீதி ரூ. 400-ம் மதுரைப் பிணைய வழக்கிற்குச் சேர்க்கப்பட்டது. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் தோழர் கி. மனோகரனுக்கும் பல கிளைகளின் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

பொதுச் செயலாளர் ஒரு ஆண் குழந்தைக்கு மதியழகன் எனப் பெயரிட்டார்.

ஒரு தோழர் 'நம் நாடு' நிதிக்கு ரூ. 1. அன்பளிப்பாக தந்தார்.

'லில்லி' என்ற சிறுமி சிறிது நேரம் நாவலரைப் பாராட்டிப் பேசி மாலை அணிவித்தது.

### கண்விழிகள் சேமிப்பு

சட்டம் இயற்றப்படுமாம்

புதுடில்லி, ஜூலை 22—

இறந்து போனவர்களுடைய கண்விழிகளை எடுத்து மற்றவர்களுடைய கண்களில் ஒட்டுவது, அந்த விழிகளைச் சேமித்து வைப்பது ஆகியவை சம்பந்தமாக மத்திய சட்டம் இயற்றுவது பற்றி கருத்தறிவிக்குமாறு இந்திய சர்க்கார் மாநில சர்க்கார்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறனர் என்றும், பதில்கள் கிடைத்தவுடன் இதுபற்றி இறுதியாக முடிவு செய்யப்படும் என்றும் மக்கள் சபையில் மத்திய சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

### உணவு அபிவிருத்தித் திட்டம்

பஞ்சாபுக்கு ரூ. 58,71,000

புதுடில்லி, ஜூலை 22—

மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள், உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டங்கள் ஆகியவற்றுக்காக பஞ்சாப் சர்க்காருக்கு, 1957—58-ம் ஆண்டுக்கு, மத்திய சர்க்கார் ரூ. 58,71,000 வழங்கியுள்ளனராம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## பன்மொழிப் புலவர் பொன்விழா

### பொதுச்செயலாளர் வேண்டுகோள்

பெரியோர்களே! தோழர்களே!

வணக்கம். பன்மொழி பயின்று தேர்ந்த நல்லாசிரியரும், நற்றமிழ் வாழ—வளர அரும்பணிகள் பல ஆற்றி வருபவரும், சீர்திருத்தச் செம்மலும், பகுத்தறிவு மணம் எங்கணும் பரப்பி வருபவரும், பொதுநலத் துறைக்கே தம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்துச் செயலாற்றி வருபவரும், நேரிய கொள்கைகளுக்காகப் பரிந்து பேசவும்—போராடவும்—தடியடி தாங்கவும்——சிறை புகவும் துணிந்த செயல் வீரரும், திராவிட முன்னேற்றக் கழகத்திடத்து நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு உழைத்து வருபவரும் ஆன பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள் ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகிறார்கள் என்பது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பதாகும்.

பன்மொழிப் புலவரின் பொன்விழாவைப் பெருமைக்குரிய வகையிலும், பூரிப்புக் கொள்ளும் முறையிலும் சிறப்பாக நடத்த வேண்டும் என்பது நண்பர்கள் பலரின் வேணவாவாகும். அவரது பொன்விழாவைக் கொண்டாடி நாம் மகிழ்ச்சியடைவதோடு மட்டுமல்லாமல், அவரையும் நிலையாக மகிழ்விக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாகவும் இருக்கிறோம். பொதுவாகப் புலவர் பெருமக்களைப் பீடிக்கின்ற வறுமை அவரைப் பெருமளவுக்குப் பீடித்து வாட்டி வதைக்கிறது. அந்தக் கொடுமையினின்றும் அவரை விடுவித்து, மகிழ்ச்சிகொள் அமைதியான வாழ்வில் அவரை ஈடுபடுத்த வேண்டியும், அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் பயக்கவேண்டியும் அவருக்குச் சிறப்புக்குரிய வகையில் பண முடிப்பைப் பரிசாக வழங்கவேண்டும் என்று நண்பர்கள் பலரும் விரும்பியுள்ளனர்.

பன்மொழிப் புலவர் பொன்விழாக்குழு ஒன்றை உருவாக்கி, அதில் அன்பர்கள் பலரையும் உறுப்பினர்களாக ஆக்கிடும் பொறுப்பினை கண்ணதாசன் அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

விழாக் குழுவின் பொருளாளராக இருந்து பணியாற்ற **அண்ணா** அவர்கள் இசைவு தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன். தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதி தந்து உதவுவோர்,

'சி. என். அண்ணாதுரை, C/O 'நம் நாடு'
24, சூரியநாராயண செட்டித் தெரு,
இராயபுரம், சென்னை-13.'

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும், தமிழார்வங்கொண்ட பிற அன்பர்களையும் பன்மொழிப் புலவரின் பொன்விழா முயற்சி வெற்றியுற பெருதவி புரியுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,

24—7—57
'அறிவகம்'
சென்னை-13

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## ஆந்திராவிலிருந்து அரிசி ஏற்றுமதி

### மண்டல ஏற்பாட்டை வர்த்தகர்கள் விரும்பவில்லையாம்!

### தானே கொள்முதல் செய்ய டில்லி முடிவு

ஐதராபாத், ஜூலை 23—

அத்தியாவசியப் பொருள்கள் திருத்தச் சட்டத்தின்கீழ் டில்லி சர்க்கார், ஆந்திர வர்த்தகர்களிடமிருந்து அரிசியைக் கொள்முதல் செய்வர் என்று தெரியவருகிறது.

இந்த வர்த்தகர்கள், தென் அரிசி மண்டலம் உருவாக்கப்பட்டதை வரவேற்பதாகத் தெரியவில்லை என்றும், மண்டலத்திற்குள்ளேயே அரிசி ஏற்றுமதியை இவர்கள் விரும்பவில்லை என்றும், இதனால் ஏற்கனவே ஏற்றுமதி செய்வது என்று அறிவித்திருந்த அரிசியை ஏற்றுமதி செய்யாமல் முடக்க எத்தனிக்கிறார்கள் என்றும், இதனால்தான் டில்லி சர்க்காரே நேரடியாக அரிசியைக் கொள்முதல் செய்ய உத்தேசிக்கிறது என்றும் உதவி உணவு மந்திரி ஏ. எம். தாமஸ் கூறியிருக்கிறார்.

## படித்துப் பட்டம் பெற்றோர் கதி!

### 5½ இலட்சம் பேர்களுக்கு வேலையில்லையாம்!

புதுடில்லி, ஜூலை 23—

1954-லிருந்து 1957-வரையில், கடந்த மூன்று ஆண்டுகளாக, படித்தும் வேலையின்றி வேலை தேடித்தரும் நிறுவனங்களில் பதிவு செய்துகொள்வோர் எண்ணிக்கை அதிகரித்துவருவதாகத் திட்டக்குழு அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறது.

வேலை தேடித்தரும் நிறுவனங்களில் 1954 மார்ச் 31-ல், படித்தும் வேலையற்றோர் 1,57,446 பேர் பதிவு செய்துகொண்டனர்; இந்தத் தொகை 1957-ல், 2,38,946 ஆக உயர்ந்துள்ளது.

விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| எஞ்சினியர்கள் | 354 |
| டாக்டர்கள் | 211 |
| மெட்ரிகுலேஷன் படித்தவர்கள் | 1,80,691 |
| இண்டர்மீடியட் படித்தவர்கள் | 30,691 |
| பி.ஏ., எம்.ஏ., இதர பட்டதாரிகள் | 23,992 |

நாட்டில், படித்து வேலையற்று இருப்போர் தொகை மொத்தத்தில் 5½ இலட்சம் இருக்கும் என்று திட்டக் குழு கூறுகிறது!

## பக்கிங்காம் கால்வாய் அபிவிருத்தி

### கோகலே குழு விசாரணை

புதுடில்லி, ஜூலை 23—

இன்னும் இரண்டு நாட்களில் சென்னை பக்கிங்காம் கால்வாய் அபிவிருத்தி பற்றி ஆராய்வதற்காக உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து அபிவிருத்திக்காக நியமிக்கப்பட்டுள்ள கோகலே குழுவினர் சென்னை வருவர் என்றும், அவர்கள் கால்வாயையும் சென்னைத் துறைமுகத்தையும் பார்வையிடுவர் என்றும் தெரியவருகிறது.

இந்தக் கால்வாய், சென்னைக்கு வடக்கே 196 மைல் நீளமுடையது; சென்னை மாநிலத்தில் 36 மைல்களும், ஆந்திராவில் எஞ்சிய மைல்களும் இந்தக் கால்வாய் ஓடுகிறது. மொத்தத்தில் காக்கிநாடா துறைமுகத்தை சென்னைத் துறைமுகத்துடன் இணைக்கிற நானூறு மைல் நீள கால்வாயாக விளங்குகிறது இந்த பக்கிங்காம் கால்வாய்; அதாவது, கிருஷ்ணா டெல்டா பிரதேசத்திலிருக்கும் சில கால்வாய்களால் இது இணைக்கப்பட்டு, கோதாவரி டெல்டா தொடர்பு ஏற்படுத்தித் தருகிறது.

எனவே, இந்தக் கால்வாயை அகலப்படுத்தவும் ஆழப்படுத்தவும், நேரடியாக சென்னைத் துறைமுகத்துடன் இணைக்கவுமாக ஆராய்ச்சிநடத்த ஆந்திர-சென்னை சர்க்கார்களுக்கு டெல்லி சர்க்கார் ரூ. 52,000 வரை மானியம் வழங்கியிருக்கிறார்கள் என்றும், அதன்படியே கோகலே குழுவினர் விசாரணை நடத்துகின்றனர் என்றும் தெரியவருகிறது.

## தமிழ்நாட்டில் 4,06,736 ஏக்கர் நிலம் தரிசாகக் கிடக்கிறதாம்!

அமைச்சர் தகவல்

சென்னை, ஜூலை 24—

தமிழ் நாட்டில் சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கு இலாயக்கான—ஆனால் தரிசாக 4,06,736 ஏக்கர் நிலம் இருப்பதாக சட்டசபையில் விவசாய அமைச்சர் அறிவித்தார்; மாவட்டவாரியாக அதன் விவரம் வருமாறு :—

| | ஏக்கர்கள் |
|---|---|
| செங்கற்பட்டு | 6,820 |
| வடஆற்காடு | 47,289 |
| தென் ஆற்காடு | 1,15,692 |
| தஞ்சை | 27,458 |
| திருச்சி | 22,530 |
| மதுரை | 41,851 |
| இராமநாதபுரம் | 4,824 |
| திருநெல்வேலி | 1,907 |
| சேலம் | 98,096 |
| கோவை | 36,451 |
| நீலகிரி | 355 |
| கன்னியாகுமரி | 2,061 |

## உத்திரப் பிரதேசத்தில் சமுதாய அபிவிருத்தித் திட்டம்

ரூ. 8,43,00,000 செலவு

புதுடில்லி, ஜூலை 22—

உத்திரப் பிரதேசத்தில் தேசிய விஸ்தரிப்பு—சமுதாய அபிவிருத்தித் தொகுதிகளில் 1957 மார்ச் கடைசிவரையில் சர்க்கார் மொத்தம் ரூ. 8·43 கோடி செலவழித்துள்ளனர் என்று மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் உத்திரப்பிரதேசத்தில் 256 சமுதாய அபிவிருத்தித் தொகுதிகளையும், 754 தேசிய விஸ்தரிப்பு தொகுதிகளையும் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

### வெளிநாட்டுக் குடிமக்கள்

இந்தியாவில் எவ்வளவு பேர்?

1957 ஜனவரி 1-ந் தேதியன்றையக் கணக்குப்படி இந்தியாவில் 28,746 வெளிநாட்டு குடிமக்கள் இருந்ததாக மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது; இவர்களில் 22,190 பேர் வர்த்தகர்கள்; 1,663 பேர் மாணவர்கள்; 4,893 பேர் மதப் பிரசாரகர்கள்; பதிவு செய்துகொள்ள வேண்டிய பெயர் அவசியமில்லாத காமன்வெல்த் நாடுகளின் குடிமக்களின் கணக்கு இதில் சேரவில்லை.

### கைதியின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது

கொலை வழக்கொன்றில், கேரளத்திலுள்ள நெய்யாற்றங்கரையைச் சேர்ந்த சங்கரன் என்பவருக்கு மதுரை செஷன்ஸ் நீதிபதி மரண தண்டனை விதித்தார். 10—7—57-ல் மதுரை மத்திய சிறையில் அவர் தூக்கிலிடப்பட்டார். அவருடைய இறுதிக் கோரிக்கைக்கு இணங்க மரணத் தூக்குப்பின் அவருடைய கண்கள் எடுக்கப்பட்டு மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரி கண் பாங்கிக்கு தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளன,

# ரூபாய்க்கு இரண்டணு வட்டி: வடவரின் சுரண்டல் கொடுமை

## ஒழித்துக்கட்டுமாறு சர்க்காருக்கு அறைகூவல்

### கூட்டுறவு இயக்க ஊழல்களை ஒழிப்பீர்

### சட்டசபையில் ஏ. கோவிந்தசாமி முழக்கம்

சென்னை சட்டமன்றத்தில் கூட்டுறவுத் துறைக்கு மானியமாக ரூ. 1,70,23,400 ஒதுக்குமாறு கூட்டுறவுத்துறை அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பிரேரித்தார்; அதன்மீது வெட்டுப் பிரேரணை கொண்டுவந்த கழக சட்டமன்ற உறுப்பினர் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசியதின் முழுவிவரம் இங்கு தரப்படுகிறது :—

"தமிழ்நாட்டில், காங்கிரஸ் அமைச்சரவை ஏற்படுவதற்கு முன்பிருந்தே கூட்டுறவு இயக்கம் சிறந்த முறையில் இயங்கி வந்திருக்கிறது என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன.

"முதலாளித்துவத்தை ஒழித்துக் கட்டக் கூடியதாகவும், தொழிலாளர்களுக்கும் பொது மக்களுக்கும் நன்மைபயக்கக் கூடியதாகவும் கூட்டுறவு இயக்கம் அமைய வேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கமாகும்.

"இந்த இயக்கத்தின் மூலம் கடன் கொடுத்தல் மட்டும் போதாது; அதன் மூலம் பல தொழில்களை நடத்தவும், விவசாயத் துறையில் நல்ல முன்னேற்றம் காணவும் வழிவகைகள் காணவேண்டும்.

"நம்முடைய நாடு ஒரு பெரிய விவசாய நாடு என்ற முடிவுக்கு வந்தபிறகு, கூட்டுறவு முறையில் விவசாயத்தை நடத்துவதற்கு அரசாங்கம் திறமையாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று இச்சமயத்தில் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

"மடங்கள், ஆலயங்களின்பேரிலுள்ள நிலங்களையெல்லாம் கூட்டுறவு விவசாயத்திற்குப் பயன்படுத்தும் திட்டத்தை நடைமுறையில் கொண்டுவருவதற்கு அரசாங்கம்முயற்சிக்கவேண்டும். அத்துறையில் ஒத்துழைப்பு தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

"மடாலய நிலங்களை மட்டுமின்றி, ஆங்காங்குள்ள புறம்போக்கு நிலங்களையும் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்வதற்கு வழிவகைகள் காணவேண்டும்; அவ்வாறு விவசாயம் செய்ய முன்வருபவர்களுக்கு அதிகக் கடன் வசதி அளிப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"இப்போது கூட்டுறவு இயக்கத்தின் மூலம் போதிய அளவுக்குக் கடன் கொடுக்கப்படாததால், விவசாயிகளும் மற்ற ஏழைகளும் ஆங்காங்கு லேவாதேவிக்காரர்களிடமிருந்தும், சிறிய முதலாளிகளிடமிருந்தும் கடன் வாங்கி பல தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள்.

"வடநாட்டு லேவாதேவிக்காரர்கள் பல தொழிற்சாலைகள் காரியாலயங்கள் முன்பு நின்றுகொண்டு, ரூபாய்க்கு இரண்டணு வட்டி என்ற விகிதத்தில் ஏழைப் பாட்டாளிகளுக்குக் கடன் கொடுத்ததை வசூலித்து வருவதை நாம் பார்க்கிறோம். இம்மாதிரி, வடநாட்டு லேவாதேவிக்காரர்கள் இங்கே வந்து சுரண்டுவதைப் பார்த்துக்கொண்டிராமல், ஏழை மக்களுக்குக் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் போதுமான அளவிற்குக் கடன் உதவி அளித்து, வடநாட்டுக்காரர்களின் இந்த லேவாதேவி முறையை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"கூட்டுறவு இயக்கம் நல்ல நோக்கங்கள், திட்டங்கள், சட்டங்கள் இவற்ருல் வளர்க்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாமையால், இன்று அந்த இயக்கத்தில் ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகத்தினை ஏற்றுக்கொள்பவர்கள் செய்யும் தவறுகள் காரணமாக இந்த ஊழல்கள் ஏற்படுகின்றன. இதனுல் மக்கள் கூட்டுறவு இயக்கத்தை அதிகமாக ஆதரிப்பதில்லை. இயக்கத்தில் பூசல்கள் அதிகமாக வளருகின்றன. சில இடங்களில் பாங்கிகள், ஸ்டோர்களில் தனிப்பட்டவர்கள் சேர அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களைச் சேர்த்துக்கொண்டால் மறுதேர்தலில் அவர்கள் எங்கே வெற்றி பெற்றுவிடுவார்களோ என்று நினைத்து நிர்வாகத்திலிருப்பவர்கள், இடம்தர மறுகிறார்கள். எனவே, அதிகமான உறுப்பினர்கள் வந்து சேர்ந்துவிடாதபடி இடையூறுகள் செய்கின்றனர்.

"கூட்டுறவு இயக்கத்தின் மூலம் ஆங்காங்கே பல கட்டிடங்கள் எழுப்பப்படுகின்றன. இதைப் பொறுத்தவரை பல இடங்களில், பணம்போன இடம் தெரியாமலே இருக்கிறது. பணம் துர்வினியோகம் ஆனதற்கு நிர்வாகத்திலிருப்பவர்கள் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்கிறார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக, கடலூர் கட்டிட சொசைட்டியில் ஒரு பெரிய தொகை—ரூ. 45 ஆயிரமோ ரூ. 25 ஆயிரமோ—போனஇடம் தெரியாமல் இருப்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இது குறித்து எந்தவித விசாரணையும் செய்யாமல் விட்டுவிட்டார்கள். அந்த ஸ்தாபனத்துடன் சம்பந்தப்பட்டவர்களால்தான் இந்த நிலைமை உண்டாயிற்று என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"கூட்டுறவு இயக்கத்தில் பல வீடுகள் கட்டப்படுகின்றன. இயக்கத்தில் ஈடுபட்டுள்ள பல தலைவர்கள் பெரும் பணக்காரர்களாக இருப்பதால், அவர்கள் பேரில் பல நகர்கள் உண்டாக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இவைகள் கட்டப்படுகின்றன. இடநெருக்கடியையும், வீடில்லாப் பிரச்சினையையும் தீர்ப்பதற்கு ஆங்காங்குள்ள நடுத்தர மக்களுக்கும் ஏழை மக்களுக்கும் வீட்டு வசதி அளிப்பதற்காகவும் இந்த வீடுகள் கட்டப்படுவதில்லை. கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டுள்ள பல பெரிய தலைவர்கள் தங்கள் உறவினர்கள் பெயராலேயே பெரிய பங்களாக்களைக் கட்டிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட வீடுகளால் இடநெருக்கடியோ வீடில்லாப் பிரச்சினையோ தீர்ந்தபாடில்லை. பெரிய பணக்காரர்களுக்குத்தான் வசதி கிடைக்கிறது; கிராமங்களிலும் நகரங்களிலும், சாதாரண மக்களுக்கு இடநெருக்கடி இருந்துகொண்டே இருக்கிறது.

"கூட்டுறவு முறையில் ரூ. 10 ஆயிரம், ரூ. 5 ஆயிரம் மதிப்பீடு உள்ள திட்டங்களில், மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.

"நில அடமான பாங்கிகளில், கடன்கள் துரிதமாகக் கொடுக்கப்படுவதில்லை. மனுக்கள் கொடுக்கப்பட்ட ஒன்று முதல் மூன்று மாதங்களுக்குள் கடன்கள் தரப்படுவதில்லை. ஆண்டுக்கணக்காகக் காலம் கடத்தப்படுகிறது. இந்த நிலைமை ஏற்படாமல் செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். குறுகிய—மத்திய—நீண்ட காலக்கடன்கள் என்று மூன்றுவகைக் கடன்கள் தரப்படுகின்றன.

"பின் குறிப்பிட்ட மத்திய காலக் கடன்களும் நீண்ட காலக் கடன்களும் கொடுக்கப்படுவதற்கு அதிகக் காலதாமதமாகிறது இந்த விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தி, கடன் கொடுப்பதில் காலதாமதத்தைத் தவிர்த்து கடன்கள் தகுந்த காலத்தில் கொடுக்கப்பட்டு மக்கள் பயனடைவதற்கான ஏற்பாட்டினை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"மேலும், விவசாயிகள் நன்மைக்காக ஆங்காங்கு விவசாய பாங்கிகளைத் திறந்து, குறைந்த வட்டியில் நீண்டகாலக் கடன் வசதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டிருக்கும் நெசவாளர்களுக்குப் போதிய கடன் வசதிகளையும், நூல் வசதிகளையும், கூலி உயர்வு வசதிகளையும் அரசாங்கம் அளிக்க வேண்டும். இதைச் செய்தால்தான், கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்திராத மற்ற நெசவாளர்களும், அவைகளில் சேருவார்கள்.

"திருநெல்வேலி, திருவில்லிப்புத்தூர் ஆகிய இரு இடங்களிலும் இரண்டு கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஏற்படுத்தப்படும் என்று கனம் நிதியமைச்சர் கூறினுர். ஆனுல் எப்போது நிறுவப்படும் என்று அவர் கூறவில்லை. மேலும் சேலம், தென்னுற்காடு மாவட்டங்களிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரத்திலும் அது போன்ற நூற்பு ஆலைகள் இந்த இரண்டாம் திட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"கூட்டுறவு இயக்கத்தால் பல விழாக்கள் நடத்தப்படுகின்றன; குறிப்பாக, 'கைத்தறி வாரம்' கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்தக் கைத்தறி வாரத்தை பொங்கல் விழாவிற்கு சிறிது முன்னுல் கொண்டாடினுல் நன்ருக இருக்கும்.

"கைத்தறிவாரம் நடத்துவது மத்திய சர்க்கார் என்பதால், நமது அரசாங்கம் இதைச் செய்யத் தயங்கலாம். 'எங்கள் மாநிலத்தைப் பொறுத்தவரையில், இந்தக் காலத்தில்தான் கைத்தறி வாரத்தைக் கொண்டாடுவோம்' என்று இந்த சர்க்கார் கண்டிப்பாக வற்புறுத்திக் கூறினுல், மத்திய சர்க்கார் இணங்குவர். நமது மாநிலத்தில், கைத்தறி வாரத்தை பொங்கல் நாளிற்கு சற்று முன்பு கொண்டாடினுல் அது நல்ல பலன் அளிக்கும் என்று கருதுகிறேன்.

"மேலும், வளவனூரில் சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்கு ஒருவருக்கு 'லைசென்சு' தரப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. 'யாருக்குத் தரப்பட்டது?' என்ற கேள்விக்குப் பதில் சொல்வதற்கு கனம் மந்திரி அவர்கள் மறுத்தார்கள். ஆகவே 'லைசென்சு' கொடுக்கப்பட்டவர் வடநாட்டுக்காரரோ என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

கனம் ஆர். வெங்கட்ராமன்:— 'சிதம்பரம் செட்டியாருக்கு அந்த 'லைசென்சு' கொடுக்கப்பட்டிருக்கிறது'

தோழர் ஏ. கோவிந்தசாமி :— 'மகிழ்ச்சி. இந்த ஆலைத் தொழிலைத் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்காமல் கூட்டுறவுமுறையில் நடத்துவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.'

# அண்ணுமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் நால்வர் உண்ணுவிரதம்!

### உணவு விடுதியினின்று நீக்கப்பட்டதற்கு எதிர்ப்பு

உணவு விடுதியினின்றும் நீக்கப்பட்டதை எதிர்த்து அண்ணுமலை பல்கலைக் கழக உணவு விடுதியின் முன்பு 24—7—57 காலை 8 மணிமுதல் உண்ணுநோன்பு இருந்துவரும் நான்கு மாணவர்களில் தோழர் சிவப்பிரகாசத்தின் உடல்நிலை கவலைக்கு இடமளிப்பதாக இருக்கிறது. இன்று இரவு 11 மணிக்கு அவருககு மார்புவலி அளவுக்கு மீறிவிட்டதால் டாக்டர் வந்து பார்வையிட்டு இரண்டு ஊசிகள் போட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

'நிலைமை கவலைக்கு இடமளிப்பதாக உள்ளது' என்று குறிப்பிட்டு, அவரை, பல்கலைக் கழக அதிகாரிகள், மருத்துவ மனைக்குக் காரில் அழைத்துச் சென்றனர்.

உண்ணு நோன்பை கைவிடுமாறு சில ஆசிரியர்கள் கோரினர். ஆனுல் சரியான முடிவுக்குப் பல்கலைக் கழக ஆட்சியாளர்கள் வாராததினுல் மாணவர்கள் உண்ணுவிரதத்தைக் கைவிட மறுத்துவிட்டனர். (ஒ. நி.)

## ஏ. வி. பி. ஆசைத்தம்பி தேர்ந்தெடுக்கப்பட்டார்

சென்னை, ஜூலை 24—

சென்னை சட்டசபை உறுப்பினர்கள் மூவர் அண்ணுமலை பல்கலைக் கழகத்தின் செனட்டிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தி. மு. க. சட்டசபை உறுப்பினர் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருவாளர்கள் வாகீசம், கந்தசாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர்.

## சொல்லும் - செயலும்!

சென்னை, ஜூலை 23—

'உணவு அமைச்சர் கைக்குத்தல் அரிசியை சாப்பிடுகிருரா அல்லது மில் அரிசியை அரிசியை சாப்பிடுகிருரா?' என்று சட்டசபையில் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் கேட்டதற்கு 'கிடைக்கும் எந்த அரிசியையும் உபயோகிக்கிறேன்' என்று உணவு அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தார்.

## கைக்குத்தல் அரிசிக்கு ஆக்கம் தருவீரா?

### க. அன்பழகன் கேள்வியும் அமைச்சர் பதிலும்

சென்னை, ஜூலை 24—

"இப்போது அரசாங்கம் நடத்தும் நியாய விலைக் கடைகளில் கைக்குத்தல் அரிசியை விற்க ஏற்பாடு செய்தால் கைக்குத்தல் அரிசிக்கு ஆக்கம் அளிப்பதாகாதா ?" என்று தோழர் க. அன்பழகன் சட்டசபையில் கேட்டபோது, அமைச்சர், 'தேவையான அளவிற்குக் கைக்குத்தல் அரிசி கிடைக்காத நிலை உள்ளது' என்று பதிலளித்தார்.

## குற்ருலத்தில் சட்டசபை !

சென்னை, ஜூலை 23—

'எல்லாக் கட்சிகளும் ஒன்ருக கூடி, கருத்துவேறுபாடின்றி முடிவு செய்தால், சட்டசபைக் கூட்டத்தை நீலகிரியில் நடத்த ஏற்பாடு செய்யப்படும்' என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம், சட்டசபையில் தெரிவித்தார்.

'6 வார காலம் சட்டசபைக் கூட்டம் உதகையில் நடைபெற்ருல் அதிகப்படியாக சர்க்காருக்கு ரூ. 50,000 செலவு ஏற்படும்' என்று, தோழர் எம். பி. சுப்பிரமணியம் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறினுர்.

## பக்கிங்காம் கால்வாய் அபிவிருத்தி வேலைகள்

சென்னை, ஜூலை 24—

வடக்கு பக்கிங்காம் கால்வாயைச் சீர்திருத்தும் ஆரம்ப வேலைகள் முடிவடைந்துள்ளது என்றும், அதற்காக ரூ. 20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் மராமத்து அமைச்சர் கக்கன் சட்டசபையில் அறிவித்தார்.

மேலும், அக்கால்வாயை துறைமுகத்துடன் இணைக்கும் நோக்குடன் ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## சென்னை—மயிலை சிந்தனையாளர் கழகப் பொதுக்கூட்டம்

## அண்ணு

கலந்துகொள்வார்

26—7—57 மாலை 6-மணிக்கு சென்னை—மயிலை சிந்தனையாளர் கழகப் பொதுக்கூட்டம் மயிலை சித்திரக்குளம் அருகில் நடைபெறும்; தோழர் ந. வேதாசலம் அவர்கள் தலைமையில் அண்ணு அவர்களும், தோழர்கள் கண்ணதாசன், பி. ஆர். கோகுலகிருஷ்ணன், ஜேசுபாதம் ஆகியோரும் பேசுவர்.

## சென்னை--பெரம்பூர்

'டாக்டர் சத்தியவாணிமுத்து' பகுத்தறிவு மன்ற திறப்புவிழா

அண்ணு கலந்து கொள்வார்

27—7—57 சனியன்று மாலை 5-மணிக்கு, பெரம்பூர் ஏரி மைதானத்தில் மேற்படி மன்றத் திறப்புவிழா 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெறும்; விழாவில் அண்ணு அவர்களும், தோழர்கள் ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ., ஆர். ஜார்ஜ் ஆகியோரும் சிறப்புரையாற்றுவர்.

### வள்ளுவர் விழா

26-7-57 மாலை 5-15 மணிக்கு, சென்னை 'போஸ்ட்மாஸ்டர் ஜெனரல்ஸ்' அலுவலக பொழுதுபோக்கு மன்றத்தின் சார்பில், தொழிலாளர் நல அதிகாரி திரு. டி. தம்பையா அவர்கள் தலைமையில் வள்ளுவர் விழா கொண்டாடப்படும்; இவ்விழாவில் தோழர்கள் க. அன்பழகன் எம். ஏ., எம். எல். ஏ. அவர்களும், ஜி. நாராயணசாமி (நாயுடு) எம். எல். ஏ. அவர்களும் சிறப்புத் தலைப்புகளில் பேருரை நிகழ்த்துவர்.

### சென்னை—சூளை நகர இளைஞர் கழகம்

27—7—57 மாலை 6-மணிக்கு, சூளை—மாணிக்க செட்டித்தெரு, எண் 10, கழக மனையில் தோழர் ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில், தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

### சொற்பயிற்சிக் கூட்டம்

26—7—57 மாலை 6-மணிக்கு, சென்னை—பிராட்வே, எண் 4-88 11-வதுவட்ட தி. மு. கழகப் பணிமனையில், தோழர் து. தமிழ்செல்வன் தலைமையில் 'மொழி' எனும் பொருள்பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.